★ குளித்தலை ★

திருக்கடம்பந்துறைக் கோயில் வரலாறு



T14736
R005D07
T. 14736

ன வெளியீடு 1981.

திருக்கடம்பந்துறைக் கோயில் வரலாறு

(கடம்பர்கோயில்)

தேவாரப்பாடல் பெற்றது

எழுதியவர் :

வரலாற்றுச் செல்வர் – புலவர் மாமணி – ஆராய்ச்சிமணி

திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்

தமிழ்ப்புலவர் – திருச்சிராப்பள்ளி.

(Writer of Guide Books for Temples and
Religious Lecturer H. R. & C. E.)

திரு. A. பாண்டியன், பி. ஏ.
நிர்வாக அதிகாரி.

திரு. A. பன்னீர்செல்வம்,

திரு. R. ராசமாணிக்கம்,

திரு. P. குருசாமி.
அறங்காவலர்கள்,

ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

தேவஸ்தான வெளியீடு

1981

உரிமை செய்யப் பெற்றது]

விலை 1—75

முதல் பதிப்பு — 1959.
இரண்டாவது பதிப்பு — 1968.
மூன்றாவது பதிப்பு — 1981.



முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் ஊற்றிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. "ஆலயந்தொழுவதுசாலவும்நன்று" என்றார் ஆன்றோர். தமிழ் நாட்டில்காணும் இடங்களில் எல்லாம் கண்ணை கவரும்படியாக பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் திருச்சிராப்பள்ளிஜில்லா-குளித்தலை தாலுகாவில் காவிரி நதிக்கு தென்கரையில் குளித்தலை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஒருமைல் தூரத்தில் திருக்கடம்பந்துறைக் கோயில் உள்ளது. தேவாரப் பாடல் பெற்றது. காசித்தலத்தைப்போல வடக்கு நோக்கியுள்ள தனிச் சிறப்பையுடையது "காலைக்கடம்பர், மத்தியானச்சொக்கர், அந்தித் திருவேங்கிநாதர்" என்னும் வழிபாட்டுப் பழமொழியைப் பெற்றது. கடம்பர் கோயில் என வழங்கும். கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். ஆகவே திருக்கடம்பந்துறை தலத்தின் பெருமையை உணர்த்த வேண்டி இச்சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டைத் தயாரிப்பதில் எங்களுடன் அன்புகொண்டு ஒத்துழைத்த அனைவர்க்கும் எங்களது நன்றி உரித்தாகுக.

இதில் கோயில் விளக்கமும், தலப் பெருமைகளும் புராண வரலாறுகளும் தேவாரம் உலா முதலிய பாடல்களும், படங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ கடம்பவனநாதரின் திருவருளைப் பெறுவார்களாக.

கடம்பர்கோவில், 1981 } A. பாண்டியன் பி. ஏ., செயல் அலுவலர்.

உள்ளடக்கம்.

		பக்கம்
1.	கோயிலும் இருப்பிடமும்	5
2.	தலத்தின் வேறு பெயர்கள்	15
3	கோயிலின் அமைப்பு	16
4.	கோயிலின் படம்	18
5.	மூர்த்திகளின் பெயர்கள்	19
6.	தீர்த்தங்கள்	20
7.	தலப்பெருமைகள்	21
8.	திருப்பணிகள்	23
9.	சிற்பங்கள்	27
10.	தினப் பூஜையும், திருவிழாக்களும்	28
11.	கோயில் தரிசனமுறை	32
12.	வருமானமும், சொத்துக்களும்	33
13	நிர்வாகம்	33
14.	புராண வரலாறுகள்	34
15.	இலக்கியப் பாடல்கள்	45

கோயில் விளக்கம்.

கோயில்–திருக்கடம்பந்துறை–(கடம்பர்கோயில்)
இடம்–குளித்தலை (திருச்சிராப்பள்ளி)
மூலவர்–ஸ்ரீகடம்பவனநாதர்
அம்மன்–முற்றிலா முலையம்மை–(பாலகுஜாம்பாள்)
தீர்த்தம் காவேரி
மரம்–கடம்ப மரம்.
வழிபட்டோர்–பிரமன், திருமால் சத்தகன்னியர்
சிறப்பு–வடக்கு நோக்கியது. [முதலியோர்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா – குளித்தலை தாலூகாவில் காவிரிக்குத் தென்கரையில் குளித்தலை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஒரு மைல் தூரத்தில் கோயில் உள்ளது. திருநாவுக்கரசரால் தேவாரம் பாடப் பெற்றது. திருச்சியிலிருந்து மோட்டார் வண்டி வசதியும் உண்டு.

திருக்கடம்பந்துறை கோயில் வரலாறு

(கடம்பர்கோயில்)

அரிய நான்மறை ஆறங்க மாயைந்து
புரியன் தேவர்க ளேத்தநஞ் சுண்டவன்
கரிய கண்டத்தினான் கடம்பந்துறை
உரியவாறு நினைமட நெஞ்சமே

(திருநாவுக்கரசர்)

1. கோயிலும், இருப்பிடமும்.

எவ்வுயிர்க்கும் தாயாகித் தன்னை அன்புடன் வழிபடுவோர்க்குத் தஞ்சமென நிற்கும் தனிபரஞ் சுடராகிய தண்ணளிமிகுந்த இறைவன் — எறும்பு முதல் எறும்பி (யானை) ஈறான உயிர் அத்தனைக்கும் இன்னருள் வழங்கும் பெருமான் — அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் அண்ணல் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம், ஆதியந்தங் கடந்த தன் அகள நிலையிலிருந்து இறங்கி, இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளிப் பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகின்றான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும் சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதிலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவது போலவும்,

இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான்.

"இருஞ் சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணுத பால்
முலைப்பால் விம்மி ஒழுவதுபோல வெளிப் ட்
டருள்வன் அன் பர்க்கே"

(சிவஞான சித்தியார்)

"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்
பாவுமுலை கண்மிகுதிப் பார்".

(சிவஞானப் பிரகாச வெண்பா)

இவ்வாறு புறத்தே கோயில்கொண்டு விளங்கும் பெருமான், அன்புடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய்கிறுன்

"காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும்" (அப்பர்)

ஆதலின் பெறுதற் கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினுல் வழிபட்டு அவன் வகுத்த நன்னறியில் சென்று அவனருளைப் பெற முயல்தல்வேண்டும். 'மானுடப் பிறவிதான் வகுத்தது மன வாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றே" என்று ஆன்றேரும் கூறியுள்ளார் "உடம்பினைப் பெற்ற பயனுவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்" என்று ஔவையார் கூறியுள்ளார்.

எப்போதும் வற்ருத நீர்ப்பெருக்கையுடையது காவிரிநதி. இதற்குப் பொன்னி, தென்கங்கை முதலிய பெயர்களும் உண்டு. பழைய நூல்களில் இதன் பெருமைகள் விரிவாய்க் கூறப்பெற்றுள்ளன "வான் பொய்ப்பினும், தான் பொய்யா மலைத் தலைய கடற் காவிரி" என்று பட்டினப்பாலை கூறும்.

"அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது"

என்று சேக்கிழார் கூறுகிருர். இந்தக் காவிரிநதி பாய்ந்து சோழ நாட்டை வளப்படுத்துகிறது சோழ நாட்டிற்குப் பல பெயர்கள் வழங்கும் அவை வளவ நாடு, சென்னிநாடு, நீர்நாடு, பொன்னிநாடு, முதலியன. "சோழநாடு சோறுடைத்து"—"நெல் லுடையான் நீர் நாடர்கோ" என்னும் பழமொழிகள் இந்நாட்டின் சிறப்பைத் தெரிவிக்கும்.

சோழநாட்டின் பெருமையை மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிருர்:-

"பூவினுள் பதுமம்போலும் புருடருள் திருமால் போலும் காவினுள் கற்பம் போலும் கலைகளுள் ஞானம் போலும் ஆவினுள் சுரான் போலும் அறத் துள் இல்லறமே போலும் நாவினுள் மெய்ந்நாப் போலும் நாட்டினுள் சோழ நாடு"

மேலும் "முந்நாட்டின் முன்நாடாய்ச் சோழர் குலக்கொடியே என்னக் காவேரி வளங் காட்டும் திருநாட்டின் பெருமையது கரையப்போமோ" என்று மற்றெருருவர் கூறுகின்ருர்.

"பொன்னெடுமா மணியீந்து திருநிறைவாய்ப்
பாவமறப் புனிதமாக்கி
மன்னுயிரை வளர்க்கின்ற தாய்முலைப்பால்
ஒக்குமென வந்துந் தெய்வப்
பொன்னிபுடை சூழ்ந்திடவே மூர்த்திதலம்
தீர்த்தமது பொலியச் சீர்சேர்
தன்னிகரி லாஞானச் சதுரர்களுங்
கண்டுமகிழ் தனிச் சோணாடே"

(பரிதியப்பர் புராணம்)

இந்நாட்டில் நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், வாவிகளும், சோலைகளும், சாலைகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத் தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும் விமானங்களும் காண்போருக்குத் தூரத்திலிருந்த படியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டுகின்றன. உடலுக்கு உணவைத் தரும் நிலங்கள் அமைந்திருப்பது போல, உள்ளத்துக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பாங்குடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. நாட்டின் பல இடங்களிலும் சைவவைணவத் தலங்கள் பல ஆங்காங்கு திகழ்கின்றன. இவ்வகையில் தெய்வ மணங்கமழும திருநாடாகச் சோழநாடு விளங்குகிறது.

"நோக்கிய இடங்களெல்லாம் நுவலருந் தலங்களாக
தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்க மூர்த்தியாக
ஆக்கிய தவத்தானும் அடைந்தவர்க்கற
மென்றோதும்
பாக்கிய மாக்கிமேலுய்ப் பதுமுது சென்னிநாடு"

(மகாவித்வான்—மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

இத்தகைய பெருமைகளையுடைய சோழவள நாட்டில் பெருமான் உறையுங்கோயில்கள் பல. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், அம்மன் கோயில்கள் திருமால்கோயில்கள் முதலியன. இவைகளுள் அந்தந்த சமயத் தலைவர்களால் தேவாரம் பாடப்பெற்ற—அல்லது மங்களா சாசனம் பெற்ற தலங்களும்பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களும், தலபுராணங்களைக் கொண்ட கோயில்களும், தனிப்பாடல்பெற்றதலங்களும், பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத் தலங்களும். பிற தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் தேவாரப பாடல்பெற்ற 274 தலங்களில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள 127 தலங்களில் 2-வது தலமாகத் திருக்கடம்பந்துறைக் கோயில் விளங்குகிறது திருநாவுக்கரசரால் தேவாரம் பாடப்பெற்றது.

திருச்சிராப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலூகாவில் திருச்சி — ஈரோடு புகைவண்டிப் பாதையில் குளித்தலை ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் வடக்கில் இக்கோயில் உள்ளது. திருச்சி—கரூர் மோட்டார் வண்டிப் பாதையில் திருச்சியில் இருந்து மேற்கே சுமார் 22 மைல் தூரத்தில் குளித்தலை பஸ் நிலையத்திலிருந்து 2 பர்லாங் தூரத்தில் கோயில் உள்ளது. துறை என்ற முடிவை பெற்ற தலங்களில் திருக்கடம்பந்துறை ஒன்று. தற்போது கடம்பர்கோயில் என வழங்குகிறது. கோயில் வடக்கு நோக்கி உள்ளது.

கோயிலுக்கு எதிரில் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடமும், நாட்டுக்கோட்டை நகரத்தார் கீழச்சிவல்பட்டி தேனப்ப செட்டியார் முதலியோரால்

அமைக்கப் பெற்ற பசுமடமும் உள்ளன. வாய்க்காலுக்கு வடக்கில் ஸ்ரீசுயம்பிரகாச சுவாமிகளின் கோயில் உள்ளது. இவ்வூரில் சர்க்கார் நிலையங்களாகத் தபால் தந்திநிலையம், பத்திரப்பதிவு நிலயம், ஜில்லா முன்சீப் கோர்ட்டு, சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டு தாலுக்கா ஆபீஸ், பஞ்சாயத்து ஆபீஸ், இஞ்சீனியர் ஆபீஸ், மின்சாரக் கார்ப்பரேஷன், பிளாக் டெவலப்மென்ட் ஆபீஸ், ஹைவேஸ் ஆபீஸ், தாலூகா போர்டாபீஸ், போலீஸ் நிலயம், முதலிய பொது அலுவலகங்களும் 1888ல் ஏற்பட்ட லோகல்பண்டு வைத்திய சாலையும், மிருகவைத்திய சாலையும் ஜில்லா போர்டைச் சேர்ந்த ஆண்கள் உயர்நிலைப்பள்ளியும், பெண்கள் உயர்நிலைப்பள்ளியும், வேறு பல தொடக்க நிலைப் பள்ளிகளும் உள்ளன கரூர் வைசியாபாங்கி, ஸ்டேட் பாங்கி, கூட்டுறவுப் பால்பண்ணை முதலிய நிலயங்களும் உள்ளன. ஊரில் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டு ஆங்காங்கு குழாய்க்கிணறுகளும், பொருத்தப் பெற்றுள்ளன வெளியூர்களிலிருந்து வரும் உத்தியோகஸ்தர்கள் தங்குவதற்கு முசாபுரி பங்களாவும் (Traveller's Bangalow) லோகல்பண்டு சத்திரமும் உள்ளன. ஜனத்தொகை சுமார் 14,000 இவ்வூரில் தேவாங்கவகுப்பினர், கல்-மரத்தச்சர், உலோகச்சிலை செய்வோர் முதலியோர் இருந்ததாக சொல்லப் படுகிறது.

திருக்கடம்பந்துறை என்னும் இத்தலத்துக்குப் பக்கத்தில் காவிரிக்குத் தென்கரையில் ராஜேந்திரம், பேட்டைவாய்த்தலை, வாட்போக்கி, கருப்பத்தூர் முதலிய ஊர்க்கோயில்களும், வடகரையில் திருஈங்கோய்மலை, முசிரி, வெள்ளூர் முதலிய ஊர்களின் கோயில்

களும் சூழ்ந்துள்ளன. தைப்பூச நாளில் இக்கோயில் களின் மூர்த்திகள் காவிரி நதிக்கு வந்து காட்சி கொடுக்கும்.

இத்தலங்களில் காலையில் கடம்பர் கோயிலையும், பகலில் வாட்போக்கி மலையையும் மாலையில் திருஈங்கோய்மலையையும் அடைந்து ஆங்குள்ள மூர்த்திகளை தரிசித்தால் மிகவும் புண்ணியமுண்டு என்பதாக ''காலைக்கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திருவேங்கிநாதர்'' என்னும் ஓர் பழமொழி வழங்குகிறது. குளித்தலை ரயில நிலையத்துக்குத் தெற்கே 2 மைல் தூரத்திலுள்ள கருங்கல் பாறைகளில் புத்தரைக் குறிக்கும் இரண்டு உருவங்கள் உளளது.

கடம்பர்கோயிலுக்குக் கிழக்கில் குளித்தலைக்குக் கீழ் புறத்தில ஸ்ரீ மீனுட்சிசுந்தரேஸ்வரர் கோயில் கடம்பர்கோயிலின் சுற்றுக் கோயிலாக உள்ளது இது வேதசன்மா என்னும் அந்தணனுககுத் திருமணக் கோலங்காட்டிய தலம். மேலும் குளித்தலையில் பேராளம்மன் கோயில். மாரியம்மன் கோயில், நீலமேகப் பெருமாள் கோயில் முதலிய கோயில்களும ஆங்காங்குள்ளன



Extract from the Hindu Paper
dated August 19, 1967
by V. S. NATARAJAN, B.A.,B.L.,
Advocate, Kulitalai.

THIRUKADAMBANTHURAI

By V. S. Natarajan

THIRUKADAMBANTHURAI, better known as Kadamberkoil is situated on the southern bank of the river 'Cauvery' at KULITTALAI, a Taluk centre of Tiruchirapalli district.

This temple, an ancient Sivalayam is about half a mile from the Kulittalai Railway Station situated on the Tiruchirapalli-Erode Line and is easily accessible by the trunk road leading to Karur from Tiruchirapalli

This sithalam is one among the ancient and prominent sthalams of Cholanadu and occupies a prominent place, second in rank, among the temples lying on the southern bank of the river Cauvery. Besides, this is one among the twelve temples the suffix of whose names end with the word "Thurai".

The presiding daity of the temple is Lord Kadambavaneswara and his consort is known by the name "Balokujambikai"

Tradition relates that Lord Siva blessed sage Kanva with his Darsan from the Kadamba tree, which

incidentally is the sacred tree of this temple and as a result the Lord of the temple is known at Kadambvaneswara.

Besides, in view of the legend stated in the Sthalapurna of this temple that Lord "Sundareswara,, appeared before Devasarma, a disciple of sage Agasthya along with his consort "Meenakshi" in his wedding paraphernalia in this sthalam and the sacred tree of the temple being Kadambavriksham, this temple stands in equal status with the famous Meenakshi Temple of Madurai.

Among the other names of this temple iike Kadambai and Kadambavanam, the name Dakshina Kasi acquired by the temple for reasons stated below requires special mention.

An unique feature of this temple is that next to Kasi this is the only place where the temple and its sanctuary is facing north, where at a distance of half a furlong the Cauvery, known here as Akanda Cauvery is flowing in its widest form.

As a result of this this place has come to be known as Dakshina Kasi and along with it the sacredness of Kasi and the sacramental significance of River Ganges, has been attached to this place and the river.

This fact has been referred to by Sri Muthuswamy Dikshadar one of the trinities of Carnatic music in his krithi "Neelakantam Bhajeham" in Kethara Goula sung in praise of the Lord.

Among other facts with regard to this temple, this Krithi incidentally reveals not only that Sri Dikshadar has paid a visit to this temple and worshiped the Lord but also proves the antiquity of the temple.

Among other ancient dignitaries who had worshiped at this temple the name of Apparswamy alias Tirunavukkarasu requries special mention, for he too like Sri Diksadar has praised this Lord in his Thevaram.

There is a saying prevalent in these parts that a man who takes pain to worship Lord Kadambavaneswara in the early hours of the morning, Lord Sokka at noon (known as Rethnagiriswarar situated at a distance of about five miles south of Kulittalai on the Kulittalai Manapparai trunk road) Lord Thiruvengi Nathar in the evening (situated on the opposite bank of the river Cauvery) and finailly Lord Simhapuriswara at midnight (about five miles west of Kulittalai along Kulittalai Karur/trunk road) on a single day is said to attain "Moksha".

On this auspicous day eight daities belonging to different temples in the neighbourhood of Kulittalai will assemble on the bank of river Cauvery for Thirthavari.

A unique feature of this festivel is that all the deities will stay on the river bank for the whole night when they will be entertained with musical performances, religious discourses and the like entertainments and only on the following day they will depart to their respeetive place.

Consequently this festivel is an occasion of great social rejoicing and a large number of people gather from the nearby towns and village to participate in the festival. This festival concludes as a fair lasting for two to thre

days. The Brahmothsavam of the temple is celebrated during the month of Masi.

Strangely enough this temple, with such a hoary past had to remain without a Rajagopuram for well over a period of fifty to sixty years.

But thanks to the efforts of the Executive Officer, Trustees and the enthusiasm of the public, the temple has been renovated and the long lelt need of a Rajagopuram has been realised.

செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சிபுரம் தாலூகாவில் கடம்பர்கோயில் என்னும் மற்றோர் ஸ்தலம் உள்ளது மூர்த்தியின் பெயர் கடம்பநாதசுவாமி என்பது. இச் செய்தி அக்கோயில் கல்வெட்டால் அறியப்படுகிறது.

2. தலத்தின் வேறு பெயர்கள்

திருக்கடம்பந்துறை என்னும் இத்தலத்திற்குக் கடம்பை, கடம்பவனம், தட்சிணகாசி, குழித்தண்டலை பிரமபுரம், சதுர்வேதபுரி, கந்தபுரம், சத்தபுரி, வட மதுரை, ஞானேதயபுரி முதலிய பெயர்களும் வழங்கும்.

கடம்பு மரங்களைக் கொண்டிருந்ததால் கடம்பந் துறை கடம்பை, கடம்பவனம் என்றும் வடக்கில் வாரணாசியைப் போலத் தெற்கில் காவிரிக்கரையில் வடக்கு நோக்கியுள்ளதால் தட்சிணகாசி என்றும் குழிந்த சோலைகளையுடையதால் குழித்தண்டலை என்றும், பிரமதேவன் வழிபட்டுத் திருக்கோயில்

முதலியன அமைத்துத் திருத் தேர்விழாவும் நடத்திய தால் பிரமபுரம் என்றும், சோமகாசுரனிடத்திலிருந்து திருமால் வேதங்களை மீட்டற்குக் காரணமாகிய திருவருளைப்பெற்ற இடமாதலால் சதுர் வேதபுரி என்றும், முருகப்பெருமான் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்கும்படிப் பூசித்துப் பேறு பெற்றதால் கந்தபுரம் என்றும், முருகக் கடவுளுக்கு இத்தலத்தில் ஞானம் விளங்கிய காரணத்தால் ஞானோதயபுரி என்றும், சத்த கன்னியர் பூசித்து, தம்மைப்பற்றி வருத்திய பிரமகத்தியினின்றும் நீங்கப்பெற்றதால் சத்தியபுரி என்றும், வேத சன்மா என்னும் அந்தணன் தவம் புரிந்து மதுரையில் நிகழ்ந்த திருமணக் கோலத்தை இத்தலத்தில் தரிசித்ததால் வடமதுரை என்றும் பெயர்கள் வழங்குகின்றன. வேத சன்மாவின் பெயர் தேவ சன்மா என்றும் கூறப்படும். இவனுக்குத் திருமணக் கோலங்காட்டிய இடமே இவ்வூரிலுள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலாகும். குழித்தண்டலை என்னும் பெயர் குளித்தலையாக மருவி வழங்குவதாக தெரிகிறது. சத்தகன்னியர் வழிபட்டதற்கு அடையாளமாகக் கோயிலில் மூலவருக்குப் பின்பக்கத்தில் சத்தகன்னியர்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

3. கோயிலின் அமைப்பு

நீர்வளம் மிகுந்த சோலைளுக்கு நடுவில் கோயில் வடக்கு நோக்கி உள்ளது வடக்கு நோக்கியுள்ள கோயில்களில்வடக்கில்வாரணாசியும்,தெற்கில்கடம்பர் கோயிலாகிய இத்தலமும் ஆகும். இதனாலேயே இத்தலம் தக்ஷிணகாசி எனப்படுகிறது. பெருமான்,

முருகன், அம்மன் மூவரும் ஒருசேர அமர்ந்து கோயில் சோமாஸ் கந்தமூர்த்தியைப் போல் விளங்குகிறது. வடக்கில் காவிரிநதி ஓடுகிறது. கோயிலுக்குள் 2 பிரகாரங்களும், வெளியில் தேரோடும் வீதியும் உள்ளன. கோயிலுக்கு முன்னே ஓர் மண்டபமும், நுழைவாயிலும் உள்ளன. உள்ளே சென்றால் 2ம் பிரகாரத்தில் கிழக்கில் வாகன மண்டபம், மடைப்பள்ளி, கிணறு முதலியவைகளும், காலபைரவர் சந்நிதியும் உள்ளன. தென்கிழக்கு மூலையில் பிரம்மதீர்த்தம் உள்ளது. வடமேற்கு மூலையில் நவராத்திரி மண்டபம் உள்ளது. பக்கத்தில் அம்மன் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. எதிரில் சுவாமி, அம்மனுக்குரிய கொடிமரங்களும், பரமநாதர் சந்நிதியும் உள்ளன. இதை அடுத்து உள் கோபுரவாயில் மூன்றுக் கண்களைக் கொண்டு விளங்குகிறது. இதைக் கடந்து சென்றால் முதல் பிரகாரத்தில் நடராஜர் சந்நிதியும், கருவூலமும் நவக்கிரகங்கள் சண்டிகேஸ்வரர் சந்நிதிகளும் உள்ளன. தெற்கில் ஜேஷ்டாதேவி, நால்வர், அறுபத்துமூவர், சேக்கிழார் சந்நிதிகளும், மேற்கில் விசுவநாதர், விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், கஜலெட்சுமி சந்நிதிகளும் உள்ளன நடுவில் மகாமண்டமும், மூலவர் கோயிலும் உள்ளன. மூலஸ்தானத்தில் கடம்பைநாதர் லிங்கவடிவத்தில் வீற்றிருக்கிறார். லிங்கமென்பது காணும் உருவினுக்கும் காணாத அருவினுக்கும் அறிகுறியாய் விளங்குவது மூலவருக்குப் பின்னே சத்தகன்னியர்களின் சிலைகள் உளளன. கோயிலுக்கு வெளியே தேவஸ்தான அலுவலகம், ஸ்ரீ பாலகுஜாம்பாள் கல்யாணமண்டபம் உள்ளது. தலத்துக்குரியமரம் கடம்பமரம் கோயிலுக்குள் ஓரிடத்தில் உள்ளது. கோயிலின் அமைப்பைக்காட்டும் படம் தனியே சேர்க்கப் பெற்றுள்ளது.

4. கோயிலின் படம்



எண்கள் விளக்கம் :—

1. முன்வாயில்—ராஜகோபுரம்
2. வாகன மண்டபம்
3 மடைப்பள்ளி
4. பிரம தீர்த்தம்
5 கிணறு (5a) காலபைரவர்
6. அம்மன் சந்நிதி

7 பரமநாதர்
8 நவராத்திரிமண்டபம்.
9–10. கொடிமரம்
11 உள்கோபுரவாயில் [3 கண்கள்
12 நடராஜர்
13 கருவூலம்

14. நவக்கிரகங்கள்
15 சேஷ்டாதேவி
16. நால்வர்
17. அறுபத்துமூவர்
18. சேக்கிழார்
19 விஸ்வநாதர்-விசாலாட்சி
20. விநாயகர் சந்நிதி
21 சுப்பிரமணியர் [வ. தெ உடன்
22. சோமாஸ்கந்தர்
23 கஜலெட்சுமி
24. உள்மண்டபவாயில்
25 மகாமண்டபம்
26 மூலவர்–கடம்பவன [நாதர்
27 தக்ஷிணாமூர்த்தி
28 சண்டிகேஸ்வரர்
29. சப்தகன்னியர்
30. முன் மண்டபம்
31. அலுவலகம் (Office)
32. ஸ்ரீ பாலகுஜாம்பாள் [கல்யாண மண்டபம்

5. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமானுக்குக் கடம்பவன நாதர் என்றும் பெயர் வழங்குகிறது. கடம்பவனத்தில் இருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது. மேலும் சுந்தரேசர், செளந்தரேசர் என்னும் பெயர்களும், பிரமன் பூசித்து வழிபட்டதால் பிரமேசர் என்னும் பெயரும் வழங்குகிறது. அம்பிகைக்கு முற்றிலா முலேயம்மை என்றும் வடமொழியில் பாலகுஜாம்பிகை என்றும் பெயர்கள் வழங்குகின்றன. திருவேணி என்னும் பெயரும் சொல்லப்படுகிறது. விநாயகர், சித்தி விநாயகராகப் போற்றப்படுகிருர். பரமநாதர் காவல் தெய்வமாக உள்ளார்.

தைப்பூச நாளில் காவிரியில் வந்து காட்சி கொடுக்கின்ற பிறவூர்க்கோயில்களின் மூர்த்திகளின் பெயர்கள் :

காவிரிக்கு தென்கரையில் உள்ளவை

ராஜேந்திரம் :- பெருமாள்-மத்தியார்ச்சுனேஸ்வரர்
தேவியார்-தேவநாயகி

பேட்டைவாய்த்தலை :- பெருமாள்-
மத்தியார்ச்சுனேஸ்வரர்
தேவியார்-தேவநாயகி

வாட்போக்கி :- பெருமாள்-இரத்தினகிரீஸ்வரர்
தேவியார்-சுரும்பார் குழலி

கருப்பத்தூர் :- பெருமான்-சிம்மபுரீஸ்வரர்
தேவியார்-சுகந்தகுந்தாளம்பாள்

காவிரிக்கு வடகரையில் உள்ள கோயில்கள்.

திருஈங்கோய்மலை பெருமான்-மரகதாசலேஸ்வரர்
தேவியார் – மரகதாம்பாள்

முசிரி பெருமான் - சந்திரமௌலீஸ்வரர்
தேவியார் – கர்பூரவல்லி

வெள்ளூர் : பெருமான் - திருக்காமீஸ்வரர்
தேவியார் – சிவகாமியம்மை

6. தீர்த்தங்கள்.

1. காவிரி நிதி – கோயிலுக்கு வடபுறம் ஓடுவது. தைப்பூச நாளில் கடம்பவனநாதரும் பிறவூர்க்கோயில்களின் மூர்த்திகளும் வந்து காட்சி கொடுக்கும். கங்கை, யமுனை, சரஸ்வதி முதலிய நதிகள் ஐப்பசி மாதத்தில் காவிரி நதியில் கலந்து கருதிய பயனைத்பெற்றதாக ஐதீகம்.

2. பிரமதீர்த்தம்: 2-ம் பிரகாரத்தில் அக்கினி மூலையில் உள்ளது பிரமன் வழிபட்டதற்கு அடையாளமாய் உள்ளது.

இத்தலத்தில் மற்றும் பல தீர்த்தங்கள் இருந்து நாளடைவில் மறைந்து போனதாகத் தெரிய வருகிறது.

7. தலப்பெருமைகள்.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. நீர் வளம் மிகுந்து இயற்கைக் காட்சிகளைக் கொண்ட இடத்தில் அமைந்துள்ளது. வடநாட்டிலுள்ள காசிப்பகுதியைப்போல் தென்னாட்டில் வடக்கு நோக்கியுள்ள சிறந்த தலமாக தக்ஷிணகாசி என்று போற்றப்படுகிறது காவிரியே கங்கை நதியாக ஓடுகிறது. தைப்பூச நாளில் எல்லா மூர்த்திகளும் ஒரு சேரவந்து காட்சி கொடுக்கும் பெருமையுடையது. „காலைக்கடம்பர் மத்தியானச்சொக்கர் அந்தி திருவேங்கிநாதர்,, என்னும் பழமொழிப்படி ஒரே நாளில் தரிசிக்க வேண்டிய மூன்று தலங்களில் காலையில் தரிசிக்க வேண்டிய பெருமையுடையது இத்தலம். தேவாரம், திருப்புகழ், உலா முதலிய அருட்பாடல்களையும், தலபுராணத்தையும் உடையது. கடம்புமரத்தைத் தல விருட்சமாக உடையது பாமநாதரை க்ஷேத்திரபாலராக உடையது.

கடம்பமரத்தைக் கொண்டிருப்பதாலும் பெருமான் சுந்தரர் என்னும் பெயர் பூண்டிருப்பதாலும், தேவசர்மாவுக்கு மதுரைத் திருமணகோலங்காட்டியதாலும் உலாவில் மதுரைத் திருவிளையாடல்கள் பல கூறப்பட்டிருப்பதாலும் இத்தலம் மதுரையுடன் ஒப்புமை

உடையதாகச் சொல்லப்படுகிறது. காவிரியில் நீராடிக் கடம்பவனநாதரை வழிபடுவோர் வேண்டிய பேறுகளைப் பெறுவர். கடம்பவனநாதருக்குரிய தசாங்கங்கள் பத்து சிறப்புப் பொருள்கள் உலா நூலில் கூறப்படுகின்றன. மலை கைலைமலை, ஆறு— காவிரி. நாடு - சோழநாடு, நகர் - கடம்பர் கோயில். மாலை - கொன்றை, குதிரை – வேதம். யானை – ஐராவதம். கொடி – இடபம, முரசு – பிரணவம். ஆணை – சூரியன், சந்திரன் முதலியவைகளை நிலை பெயராது ஒழுகச்செய்யும் ஆணை.

வழிபட்டோர்: திருநாவுக்கரசர், அருணகிரிநாதர், ஐயடிகள் காடவர்கோன் முதலியோர் இத்தலத்துப் பெருமானை வழிபட்டுத் தேவாரம், திருப்புகழ் முதலிய அருட்பாடல்களைப் பாடியுள்ளார்கள். புராண வரலாற்றின்படி கண்ணுவ முனிவர்க்கும், தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்ப மரத்தில் தோன்றிக் காட்சி கொடுத்த தலம். பிரமன், திருமால் முருகப்பெருமான், சத்தகன்னியர், தேவசன்மா, அகத்தியர் மூதலியோர் பெருமானை வழிபட்டு பேறு பெற்றுள்ளார்கள். இவர்களுடைய வரலாறுகள் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன.

திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரப் பதிகத்தில் உலகத்தார்க்குச் சில உபதேசங்களை—நல்லுரைகளை வழங்கியுள்ளார் :—

"முனகு தீர்த்தொழு தெழுமின்கள் கடம்பந்துறை நினையவல்லவர் நீள்விசும்பாள்வர் சீரியபத்தர் சென்றடை மின்கள், நண்ண நம்வினை நாசமே,

சிறைகொண்டவினை தீரத்தொழுமின்கள் பங்கமின்றிப்பணிந் தெழுமின்கள், உரியவாறு நினைமட நெஞ்சமே, நாமேத்த நந்திவினை நாசமே, நோய் கெட நூலால் நன்றுநினைமின்கள், மேலா நாம் செய்த வல்வினை வீடுமே,,

பெருமானுடைய இயல்புகளைப் பல தொடர்களால் அடுக்கிக் காட்டுகிறார்.

"கற்றைச் செஞ்சடையான் கனகப்புன்சடையான் ஆரியந் தமிழோடிசையானவன் கூறிய குணத்தார் குறி நின்றவன். பண்ணின் இன்மொழி கேட்கும் பரமன், மறை கொண்ட மனத்தான், கறைகொண்டான் நங்கை பாகம் வைத்த நறுஞ்சோதி, கரிய கண்டத்தான், உமையொரு பாகன், காமற் காய்ந்த பிரான், பாலானைந்துடன் ஆடும் பரமனார், காலாலூன்று கந்தான்".

8. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராமல் பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிகப் புண்ணியத்தை தரும் என்பர்

புதிதுறப் பணிகள் வேறு புரிவதின் பழயதொண்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிகப் புண்ணியந் தான் எய்தும்,, என்று ஆன்றோர் கூறியுள்ளார்கள்.

மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி நாதமாமிலிங்கமாதி ஒளின்புட் கரணியாதி சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குக் குறுபலன் தான்,

ஓது முன் செய்தோர் தம்மில் ஆயிரங் குணித மோங்கும்.

(சிவபுண்ணியத் தெளிவு)

இக்கோயிலில் அவ்வப்போது திருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன. பாகை என்னும் ஊரிலிருந்த சரவணை என்னும் செல்வர் இத்தலத்துப் பெருமானுக்குத் திருவாபரணங்கள் செய்து வைத்ததாக உலா நூலில் சொல்லப்படுகிறது நாட்டுக்கோட்டை நகரத்தார் குலத்தைச்சேர்ந்த தேவகோட்டை தண்ணீர்ப்பந்தல் வெங்கிடஜலம் செட்டியார் 1921-ம் ஆண்டில் இக்கோயிலைத் திருப்பணி செய்யத் தொடங்கிச் சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து உள்மண்டபங்கள், தூண்கள், சுற்றுச்சுவர்கள் முதலிய திருப்பணிகள் நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடைபெருமல் நின்றுவிட்டது பிறகு காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளாசியால் 1944ம் ஆண்டில கும்பாபிஷேகத் திருப்பணி தொடங்கப்பெற்றுத் தாரண-ஸு வைகாசி-மீ 19ந் தேதி 1—6—44 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு மகா கும்பாபிஷேக வைபவம மிகச் சிறப்புடன் நடைபெற்றது. இரவில் பஞ்சமூர்த்திகளும் புறப்பட்டுப் பவனி வந்து காட்சி கொடுத்தார்கள் இவ்வரலாற்றை எழுதிய ஆசிரியர்க்கும் அந்தக்கும்பாபிஷேகக் காட்சிகளைக் கண்டு மகிழும்படியான பேறு கிடைத்தது.

இவ்வாலயத்தில் மூன்பு ராஜகோபுரம் இல்லாத குறையை உணர்ந்து சென்னை அறநிலையங்களின் ஆணையர் அவர்கள் பார்வையிட்டு திருப்பணிக்குழு ஒன்று அமைத்து 19-3-'60ல் கால் கோள் விழா

நடைபெற்றது. பிறகு அறநிலைய ஆட்சித்துறையினர் அரசாங்கத்தின் ஆதரவிலும், பொதுமக்கள் ஆதரவிலும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வாயில் கொண்ட அழகிய இராஜகோபுரம் அமைத்துக் கண்ணைக்கவரும் வண்ணங்கள் தீட்டியும், விநாயகர், சுப்ரமண்யர், சுவாமி. அம்மன், நடராஜர் முதலான விமானங்களுக்கு பழுது பார்த்து வண்ணங்கள் தீட்டி ஷெ சன்னதிகளின் முகப்பில் சித்திரங்கள் தீட்டி, கோபுர வாயில் முன்பு உடைந்த பாவுக்கற்களைப் எடுத்து புதுப்பித்து பதினாறுகால் மண்டபத்தின் மேல் முகப்பில் பஞ்சமூர்த்திகள் சுதைகள் செய்து வண்ணங்கள் தீட்டி உள் இரண்டாவது பிரகாரம் தளவரிசை அமைக்கப்பட்டு மின்சார விளக்குகளை பிரித்து புதியதாக அமைத்து இவ்வாருக திருப்பணி நிறைவேறி, சென்ற பராபவ ஆண்டு, ஆவணித் திங்கள் 3ம் நாள் (19-8-66) வெள்ளிக்கிழமை யாக சாலை பூஜை தொடங்கி 21—8—66 ஞாயிற்றுக்கிழமை சஷ்டி திதி சித்ரா நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுப தினத்தில் உதயாதி நாழிகை 4-24க்கு மேல் 9–24 நாழிகைக்குள் 7–45 மணிக்கு சென்னை அறநிலைய ஆணையர், துணை ஆணையர். உதவி ஆணையர், சென்னை தருமை ஆதீன தேவாலயப் பிரசாரத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்திர தம்பிரான் சுவாமிகள். மற்றும் பக்த கோடிகள் முன்பாக அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும். இரவு பஞ்சமூர்த்திவீதி உலாவில் பித்துக்குளி-தவத்திரு முருகதாஸ் அவர்கள் பஜனையும், 19—8—66 முதல் 21—8—66வ வரை உறையூர் திரு. A. அருணஜலமுதலியார் அவர்கள் ஆதரவில் பல ஓதுவாமூர்த்திகளால் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன.

இத்திருப்பணி நிறைவேறும் வண்ணம் பங்கெடுத்துக் கொண்டு உதவிய அன்பர்களுக்கு ஸ்ரீ கடம்பவனேஸ்வரர் எல்லா நலன்களும் அருள்வாராக.

9. சமயப்பணி

இவ்வாலயத்தில் மாசி மகப் பெருவிழாவிலும், மற்ற விசேஷ நாட்களிலும் தேவஸ்தான சார்பில் இசைச் சொற்பொழிவு, இன்னிசைக் கச்சேரியும், திருமுறைப்பாராயணமும், திருவனந்தல் கட்டளைச் சார்பாக சிறந்த ஓதுவா மூர்த்திகளை கொண்டு நான்கு நாட்கள் திருமுறைப் பாராயணமும் நடைபெற்று வருகிறது. தவிரவும் இத்தலத்திலுள்ள மெய்யன்பர்களால் 12-8-65 தேதி முதல் (அப்பர் உழவாரப்பணி, வாரவழிபாடு) ஸ்ரீ அப்பர்பெருமான் தோற்றுவித்த உழவாரத் திருத்தொண்டை நினைவூட்டும் பொருட்டு பிரதி ஞாயிறு தோறும் காலை 8 மணி முதல் 9-மணி வரையில் உழவாரப்பணியும், (திருக்கோயிலை தூய்மை செய்தல்) மாலை 6-மணி முதல் 7-மணி வரையில் கூட்டு வழிபாடும் நடைபெறுகின்றன. தேவஸ்தானத்தில் 19-3-60 தேதி முதல் நிரந்தரமாக ஓதுவாமூர்த்தி ஒருவரை நியமித்து பிரதி தினமும் மாலைப்பூஜைகளில் சன்னதிகள் தோறும திருமுறை இன்னிசையும் நடைபெறுகின்றன.

10. ஸ்ரீ பாலகுஜாம்பாள் கல்யாண மண்டபம்.

இவ்வாலயத்திற்கு கீழ்புரம் சமீபத்தில் ரூ. 25000 செலவில் 'ஸ்ரீ பாலகுஜாம்பாள் கலயாண மண்டபம்' ஒன்று கட்டப்பட்டுள்ளது. பாத்திரங்கள் இல்லாமல் கல்யாணம் & இதர வைதீக விசேஷங்கள் ஒன்றுக்கு

வாடகை ரூ, 90ம், பாத்திரங்களுக்குவாடகைரூ. 50ம், மின்சாரக் கட்டணம் தனியாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

11. அர்ச்சனை & கல்யாண கட்டணம்.

இவ்வாலயத்தில் அஷ்டோத்திர அர்ச்சனை 1க்கு ரூ. 0–50 பைசாவும், சஹஸ்ரநாமம் அர்ச்சனை 1க்கு ரூ. 2–00 வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் கல்யாணம் செய்வதற்கு ரூ 35 கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

12. அருணகிரிநாதர் பிரதிஷ்டை.

இத்தலம் திருப்புகழ் பாடல் பெற்றதால் ஸ்ரீ அருணகிரிநாதர் விழாநடத்த இவ்வூர் பெருமக்களின் உதவியாலும் குளித்தலை திரு. கோ. சந்தானம் அவர்களின் முயற்சியாலும் 26-12-54-ல் அருணகிரிநாதர் திருவுருவப் படத் திறப்பு விழாவும், 23 – 6 – 56ல் அருணகிரிநாதர் உற்சவர் பிரதிஷ்டையும் 19-3-60ல் சென்னை இந்துமத அறநிலைய பாதுகாப்புத்துறை ஆணையர் உயர்திரு. A. உத்தண்டராமன் B.A. B.L. I.A.S. அவர்களின் முன்னிலையில் ஆறுமுகப்பெருமான் சன்னதியின் முன்பாக மூலவர் பிரதிஷ்டையும் செய்து ஆண்டுதோறும் ஆனித்திங்கள் மூல நக்ஷத்திரத்தில் அருணகிரிநாதர் ஜெயந்திவிழா பொதுமக்கள் உதவியால் சிறப்பாக நடைபெற்று வருகிறது,

13. சிற்பங்கள்

கோயிலும், மூர்த்திகளும் அழகிய சிற்பங்களுடன் விளங்குகின்றன. கோயில் வடக்கு நோக்கி சோமாஸ்

கந்த வடிவம் போல் உள்ளது. உற்சவ மூர்த்திகளில் இரண்டு நடராஜ மூர்த்திகளும், இரண்டு சோமாஸ் கந்த மூர்த்திகளும் உள்ளன. கோயில் திருப்பணி செய்தபோது 2ம் பிரகாரத்தில் முயலகனில்லாத நடராஜ உற்சவ மூர்த்தி ஒன்றும், சோமாஸ்கந்தர் மூர்த்தி ஒன்றும் பூமியிலிருந்து கிடைத்தன. அவைகள் அந்தந்த சந்நிதிகளில் அமர்த்தப் பட்டுள்ளன. ஆனி மாதத்தில் முயலகன் இல்லாத நடராஜமூர்த்தியும், மார்கழித் திருவாதிரை நாளில் முயலகனுள்ள நட ராஜ மூர்த்தியும் புறப்பட்டுக் காட்சி கொடுக்கும் அம்மையின் திருவுருவமும் அழகிய சிற்பமும், கருணை நோக்கும் கொண்டு விளங்குகிறது.

14. தினப்பூஜையும், திருவிழாக்களும்.

இக்கோயிலில் தினந்தோறும் விடியற் காலையில் திருவனந்தல் பூஜை 7½ மணிக்கும், காலையில் 8½ மணிக்கும், உச்சியில் 12 மணிக்கும், மாலையில் 6மணிக்கும், இரவில் 9 மணிக்கும் ஐந்து காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்து வருகின்றன. பூஜை நேரங்களில் பெரியமணி அடிக்கப்படும். அந் தந்த நேரங்களில் கோயிலுக்குச் சென்று வழிபடு வதால் மிக்க புண்ணியம் உண்டு.

"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர் போம்- (மாலையினில்
வந்து சிவன் தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்."

(சிவதரிசன மகத்துவம்)

மேலும் பிரதோட காலத்தில் சென்று சிவ தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு. பிரதோட கால மாவது வளர் பிறையிலும் தேய்பிறையிலும் வரும் திரயோதசி திதிகளில் சூரியன் மறைவதற்கு முன் னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும், பின்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும் கொண்ட காலம், சிவ பெருமான் ஆலகாலவிஷம் உண்டருளிய காலம் என்பர்.

''வாழிய இருபக்கத்தும் வளர்திரயோ தசிக்கண்
ஆழியிற் கதிரோன் வீழும் அதற்குமுன் மூன்றே
முக்கால்
நாழிகை பின்னும் மந்த நாழிகை இனைய காலம்
பாழியங்கடல்சூழ் வைப்போர் பகர் பிரதோடம்
என்பார்''
(மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை)

திருவிழாக்கள் :- ஆண்டு தோறும் மாசி மாதத்தில் பிரமோற்சவமாகிய பெருவிழா அசுவதி நாளில் தொடங்கிப் பத்து நாட்கள் நடைபெற்று வருகிறது. தினந்தோறும் மூர்த்திகள் பல வாகனங் களில் புறப்பட்டு வீதியுலா வரும். 5-ம் நாளில் ரிஷப வாகனக் காட்சியும், 9-ம் நாளில் தேரோட்ட மும், 10-ம் நாளில் தீர்த்தவாரியும் நடைபெறும். இத்திருவிழா பிரமதேவனால் சித்திரை மாதத்தில் தொடங்கப்பெற்றுச் சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தவாரியுடன் முடிவுற்றதாகத் தலபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

தைப்பூச விழா :- இத்தலத்தில் நடைபெறும் முக்கிய திருவிழாக்களுள் ஒன்று தைமாதம் பூச நட்சத்திர நாளில் பகலில் கடம்பந்துறை நாதரும், தேவியும் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி அழகிய

சப்பரத்தில் அமர்ந்து காவிரிக் கரைக்குச் சென்று தீர்த்தங் கொடுத்துப் பூசவிழாவிற்கென்று அமைக்கப் பெற்ற அலங்காரப் பந்தலில் வீற்றிருந்து காட்சி கொடுக்கும். இவ்வாறே காவிரிக்குத் தென்கரை யிலுள்ள ராஜேந்திரம், பேட்டைவாய்த்தலை, இரத்தினகிரி, கருப்பத்தூர் கோயில்களின் மூர்த்தி களும் வடகரையிலுள்ள திருஈங்கோய்மலை, முசிறி, வெள்ளூர்க் கோயில்களின் மூர்த்திகளும் ரிஷப வாகனங்களில் அமர்ந்து அழகியசப்பரங்களில் எழுந் தருளிக் காவிரிக் கரையிலுள்ள சிங்காரப் பந்தலில் தனித் தனியே தங்கியிருந்து காட்சி கொடுக்கும். இரவில் ஒரே நேரத்தில் எல்லா மூர்த்திகளுக்கும் பூஜை ஆராதனைகள் நடைபெறும். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். மேல்க்கண்ட எட்டுக்கோயில் மூர்த்திகளும் வந்து சேரும்போதும், புறப்படும்போதும் சந்திப்புத் தீபாராதனை நடை பெறும் பூச நாளில் எல்லா மூர்த்திகளும் இரவு முழுவதும் பந்தலில் தங்கியிருக்கும். அப்போது ஆடல் பாடல்களும், இசைக்கூட்டங்களும், சொற் பொழிவுகளும் நடைபெறும். பந்தலுக்கு வெளியே பலவிதக் கடைகளும் வேடிக்கை விநோதக் கூட்டங் களும் சிறந்து விளங்கும். மறு நாள் காலையில் எல்லா மூர்த்திகளும் புறப்பட்டு அந்தந்த கோயில் களுக்குப் போய்ச்சேரும் முற்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் நடைபெற்றுவந்த இந்திர விழாவைப்போன்று இவ்விழாவும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

"தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"

(திருஞான சம்பந்தர்)

மாத விழாக்கள் :— பங்குனி மாதத்தில் உத்திர நாளில் அஸ்திர தேவர் காவிரிக்குச் சென்று தீர்த்தங் கொடுக்கும். இரவில் சுவாமியும், அம்மனும் ரிஷப வாகனத்தில் புறப்படும். சித்திரை வருடப் பிறப்பு நாளிலும், பௌர்ணமி நாளிலும சுவாமியும் அம்மனும் இரவில் ரிஷப வாகனத்தில் புறப்படும் வைகாசி விசாக நாளில் சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையுடன் மயில் வாகனத்தில் புறப்படும். ஆனி உத்திர நாளில் நடராஜருக்கு அபிஷேகமும் முயல கனில்லாத நடராஜர்புறப்பாடும் நிகழும், ஆடி மாதத்தில் அம்மனுக்கு ஆடிப்பூர விழா 10 நாட்கள் நடைபெறும் பூர நாளில் அம்மன் தேர்மட்டும் ஓடும். ஆவணியில் ஆவணிமூல விழா 2 நாட்கள நிகழும். கயிறு மாற்றுதல் காட்சியும், பிட்டுக்கு மண் சுமத்தல் விழாவும் நிகழும். புரட்டாசியில் நவராத்திரி விழா 10 நாட்கள் நிகழும். அம்மன் கொலு வீற்றிருந்து விஜயதசமி நாளில் அம்மன் புறப்படும். ஐப்பசி மாதப் பிறப்பில் துலாக் காவேரியில் மூர்த்திகள் தீர்த்தங்கொடுக்கும். பஞ்சமூர்த்திகளும் காலையில் காவேரிக்குச் சென்று திரும்பி இரவில் வெள்ளி ரிஷபத்தில் வீதியுலா வரும். கந்தர் சஷ்டி விழாவில் 6–ம் நாள் சூரசம்மாரமும், 7ம் நாள் வள்ளி தெய்வானை திருமணமும் நிகழும். பௌர்ணமியில் அன்னபிஷேகம் நடைபெறும். கார்த்திகை மாதம் கார்த்திகை நாளில் தீபக்காட்சியுடன் சொக்கப்பானையும் கொளுத்தப்படும். இரவில் பஞ்சமூர்த்திகள் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுக்கும். மார்கழியில் விடியற்காலையில் தனுர் மாதப் பூஜை நிகழும். திருவாதிரை விழா 10 நாட்கள் நிகழும. திருவாதிரை நாளில் நடராஜர் தரிசனம் நிகழும்

முயலகனுள்ள நடராஜர் புறப்பட்டுத் தெரிசனங் கொடுக்கும். விடியற்காலத்தில் திருவெம்பாவை பள்ளியெழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

தை மாதப் பிறப்பு நாளில் சுவாமியும், அம்மனும் வெள்ளி ரிஷபத்தில் எழுந்தருளி காட்சி கொடுக்கும் மாட்டுப்பொங்கல் நாளில்குதிரைவாகனத்தில் சுவாமி புறப்படும். தைப்பூச நாளில் கடம்பவனேசர் மற்ற கோயில்களின் மூர்த்திகளுடன் காவிரி நதிக்கு புறப்பட்டுச் சென்று இரவில் தங்கியிருந்து மறுநாள் காலையில் திரும்பும் பூசநாள் விழா தனியே விவரிக்கப் பட்டுள்ளது.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினல் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்"

என்னும் பெரிய புராணப் பாடலின்படி மனிதராய் பிறந்தவர் அனைவரும் பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக்கண்டு தரிசித்துபெருமான் அருளால் வேண்டும் நலன்களை பெறுவார்களாக.

15. கோயில் தரிசன முறை

கோயிலுக்குச் செல்வோர் நீராடிச் சிவ சின்னங் களாகிய திருநீறு. உருத்திராக்கம் அணிந்து தேங்காய், பழம், கற்பூரம் முதலியவைகளில் இயன்ற அளவு கொண்டு சென்று முதலில் விநாயகரையும், முருகப்பெருமானையும், சிவபிரானையும் பிறகு நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திர சேகரர், சமயகுரவர், நால்வர், அறுபத்து மூவர் முதலியோரையும் பிறகு தேவியார், சண்டிகேஸ்வரர், பைரவர் முதலியோரையும் முறையாகத் தரிசிக்க

வேண்டும். சிறிது நேரம் மௌனமாயிருந்து தியா னம் செய்ய வேண்டும்.

கோயிலில் செய்யத்தகாத காரியங்கள்: மலசலங் கழித்தல், எச்சில் உமிழ்தல், சூதாடுதல், ஆசாரமில் லாது செல்தல், வீண் வார்த்தை பேசுதல், அவசர மாக வலம் வருதல், நந்தி தேவருக்கும் சிவபெருமா னுக்கும் இடையில் போதல், நிர்மாலியப் பொருள்களை மிதித்தல் முதலியன.

16. வருமானமும் சொத்துக்களும்.

இக்கோயிலுக்கு 50 ஏக்கர் நன்செய் நிலங்களும் 54 ஏக்கர் புன்செய் நிலங்களும் ஆக 104 ஏக்கர் நிலங் கள், கடம்பர்கோயில் வைகநல்லூர், தண்ணீர்ப்பள்ளி வதியம், மணத்தட்டை, போத்துராவுத்தன்பட்டி முதலிய கிராமங்களில் உள்ளன இவைகளின் குத்தகை மூலமாய் ஆண்டு தோறும் சுமார் ரூ 90,000 ரூபாய், வருமானம் வரும். சுமார் 5 இலட்சம் மதிப் புள்ள நகைகளும், வெள்ளி வாகனங்களும் உள்ளன.

17. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் குளித்தலை தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது பிறகு B. O. No. 1548-6-5-46, B. O. No. 5052- 13-9-50 கடிதங்களின்படி 1946. 1950-ம் ஆண்டுகளில் புதிய திட்டங்கள் (scheme) ஏற்பட்டு 1950 முதல் சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறையின் (Hindu Religious and charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வரு கிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரியும், அறங்காவலர்களும் (Trustees) கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

18. புராண வரலாறுகள்

கடம்பந்துறை, இரத்தினகிரி, திருஈங்கோய்மலை என்னும் மூன்று தலங்களுக்கும் சேர்த்து வடமொழியிலிருந்து தமிழில் உரை நடையில் இயற்றப்பட்ட ஓர் புராணம் உள்ளது. நைமிச்சருக்கம் முதல் யாத்திரைச் சருக்கம் வரையில் பலவரலாறுகள் கூறப்பட்டுள்ளன. கந்தபுராணத்தில் உத்தரபாகத்தில் சொலலப்பட்ட கடம்பவனத் தலத்தின் பெருமைகளைச் சௌனகர் முதலிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளது. அவைகளில் சிலமுன்பதிப்பில் இருந்தபடியே சேர்க்கப்பெற்றுள்ளன.

1. பிரமதேவன் பூசித்துப் பேறுபெற்றது

பூர்வ பிரமகற்பத்தில் சிருட்டி கர்த்தாவும் விண்டு புதல்வனுமான பிரமதேவன் தன்றவ வலியாற் கிடைத்த சிருட்டித் தொழிலால் ஆன்ம கோடிகளின் புண்ணிய பாவத்திற்கேற்பப் பலகோடி யுகங்கள் அவர்களுக்குத் தனு கரண புவன போகங்களைப் படைத்துக் களைப்புற்றவனாய் திருக்கைலாய மலையையடைந்தான். அம்மலையில் எழுந்தருளியிரானின்ற தேவதேவனும் உமா நாதனுமாகிய சிவபிரான் சன்னிதியிற் சென்று பணிந்து பக்தியோடு பலவாறு துதித்து எம்பெருமானே! இமையவர்கோனே! அடியேனுக்குப் பணித்த சிருட்டித் தொழிலால் பெரிதும் வெறுப்புற்றேன். பேரின்ப வாழ்வொன்றே இனிப்பெற விரும்புகின்றேன். கண்ணுதற் பெருமானே! கருணைக் கடலே! வேண்டுவோர் வேண்டியதருள்வோனே! அடியேன் வேண்டுக்கோளுக்கு இரங்கிமுத்தியின்பத்தைத்தந்தருள வேண்டுமென்று

பலவாறு இரந்துநின்றான். சிவபிரான் பிரமதேவனின் பக்தி வைராக்கியத்திற்கு மெச்சிப் பிரமதேவனை நோக்கி ஏ! திருமால் புதல்வனே! உனது விருப்பப்படி எமது திருவருளைப் பெறுதற்குத் தக்க மார்க்கத்தை தெரிவிக்கின்றோம். அவ்வாறே நீ சென்று அங்கு கடுந்தவமியற்றுவாயாகில் நாம் உமா தேவியாரோடும எழுந்தருளி உனக்கு இனிப் பிறவா நெறியையும் அளிக்கின்றோம் என்று விண்ணப் பித்தனர். பிரமதேவன் சிவபிரானை நோக்கித் தவமியற்றுதற்குரிய தானத்தையும் முறையையும் அருளவேண்டும் மென்றிரந்தான். அவ்வாறே சிவ பிரான் அருள்வாராகிப் பிரமனை நோக்கி ஏ! கமலாசனு! கர்மபூமியாகிய பூலோகத்தில் ஆன்மாக் களுய்தற்பொருட்டு நாமே நமது சக்தியோடு பல மூர்த்தி தீர்த்தத் தலங்களாக எழுந்தருளி ஆண்டு வழிபடும் முத்தான்மாக்களுக்கு சோபானக்கிரமமாய் மும்மைப் பதவியும் அருளிச் செய்கின்றோம் அவற் றுள் எமது சொரூபமாகிற சத்து சித்து ஆனந்த மென்னு மூன்று வடிவங்களும் பாரத நாட்டிலே விந்தியமலைக்குத் தெற்கே நான் அன்பர்களை மறந் தாலும், அன்பர்கள் நம்மை மறந்தாலும் தம்பிரவாக எல்லைமறவாக் காவிரிநதி பாயுஞ் சோழ வளநாட்டில் அகண்ட காவேரியின் தென்பால் சத்து வடிவான அரதனைமலையும். அகண்டகாவிரியின் வடபால் சித்துவடிவான மரகதமலையும் காவிரியின் தென்கரையோரமாய் ஆனந்தவடிவான திருக்கடம் பந்துறையுமாய், இம்மூன்று தலங்களும் அரை யோசனை தூரத்திற்குள் சச்சிதானந்த வடிவாயமைந் தும். சித்தையும் ஆனந்தத்தை ஊடுறுவிக் குறுமுனி கமண்டல காவிரி நீர் பெருகிவரும் புண்ணியத்

தலமாய்: காலேக்கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திருவீங்கொய்நாதரென்று உலக வழக்காய் வழங்கும் மூத்தலமான்மியம்பெற்று விளங்குகின்றன. அவற்றுள் ஆனந்தவடிவாயமைந்த திருக்கடம்பந் துறையை யடைந்து திருக்காவிரியில் மூக்காலமும் நீராடி அப்புனித நீர்கொண்டு எம்மை முக்காலமும் மந்திரபூர்வமாய் பக்தியோடு அபிஷேகித்து பூசித்துத் துதித்து நிட்டை கூடித் தவமியற்றுவாயாக என்று அருள்புரிந்தனர்.

அவ்வாறே பிரமதேவன் பூலோகத்தையடைந்து கேதாரம், காசி, காஞ்சி, சிதம்பர முதலிய பஞ்சபூத தலங்களும், சப்தவிடங்கத் தலங்களும். மற்றுமுள்ள மூர்த்திதலம் தீர்த்தங்களும் தரிசித்துக்கொண்டு சோழ வளநாட்டில் அகண்ட காவிரியின் தென்கரை யோரமுள்ள தெக்ஷண காசி யென்னும் திருக்கடம்ப வனத்தையடைந்தான். அவ்வுத்தம ஆனந்தமயமான தானத்தை பிரமனடைந்ததும் இரு வினையொப்பு மலபரிபாகம் சத்தி நிபாதம் வரப்பெற்று ஆனந்தப் பரவசனுயினன் உடனே பிரமதேவன் நல்லுணர்வு பெற்றெழுந்து யாமத்திற் பொன்னி நீராடிப்பொற் குடத்திற் புனித நீர்கொண்டு புராரியை முறைப்படி யாட்டிவேதமந்திரங்களால் அபிடேகித்துப் பாரிசாதம் கொன்றை அறுகு, தும்பை முதலிய வழிபாடுகள் செய்து உத்திர முகமாய் இருந்துகொண்டு ஆயிரம் தேவ ஆண்டு இமையா நாட்டத்தோடு ஐம்புலனொ டுக்கிக் கடுந்தவங் கிடந்தான்.

கமலாசனன் தவத்திற்கிரங்கி கங்காதரனை உமாநாதன் கணநாதர் புடைசூழ இடபாரூடரா யெழுந்தருளிப் பிரமதேவனுக்குத்தரிசனங்கொடுத்து

அருள்பாலித்தருளினர். பங்கயாசனன் விரும்பியவண்ணம் இனிப்பிறவாவின்பமருளி பிரமதேவனை நோக்கி அன்பனே! இவ்விலிங்கத்தில் என்றும்வீற்றிருந்தருளி எம்மைத்தெரிசித்து இக பரங்களை விரும்பும் பக்த கோடிகளுக்கு இஷ்டசித்திகள் அருள்புரிந்து வருவோம். ஆதலின் இத்தலத்தில் நமக்கும், உமைக்கும் கணேசர், சுப்பிரமணியர் முதலிய பரிவாரங்களுக்கும் ஓர் ஆலயம் அமைத்து இதன் அக்கினி மூலையில் உனது பெயரால் ஒரு தீர்த்தமும் உண்டாக்கி நித்திய நைமித்திய உற்சவாதிகளும் நடத்திப் பிறகு நம்மோடு இரண்டறக்கலத்தலாகிற சித்தாந்த முத்திப்பேறடைவாயாக என்று அனுகிரகித்து அவ்விலிங்கத்துள் மறைந்தருளினர் என்று சூதபுராணிகர் நைமிச முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளினர்.

2. சப்தமாதர்கள் பூசித்தது

ஓர் காலத்தில் துர்க்காதேவிக்கும் வலியுடைய தூம்ரலோசன் என்னும் ஓர் அசுரனுக்கும் பெரும் போர் விளைந்தது. அப்போரில் அசுரன் துர்க்காதேவியைக் கொடுங்கணை கொண்டு வாட்டியதால் துர்க்காதேவி சோர்வுற்றனள். அஃதுணர்ந்துமருங்கு நின்ற சப்த மாதர்களும் மிகுந்த கோபாவேசத்தால் மனங்கொதித்து அவ்வசுரனை பலமான கணைகள் கொண்டு எதிர்த்துப் போர் தொடுத்தனர். அசுரன் அவர்களுக்கு ஆற்ருது புறங்காட்டி ஓடி கடுந்தவமியற்றுங் காத்தியாயன மகரிஷியின் ஆச்சிரமமடைந்து மறைந்தான். அசுரனைத் துடர்ந்து வந்த சப்த மாதர்கள் முனிவரைக்கண்டு அவ்வசுரனே மாயையால் இம்முனி வேடங்கொண்டுள்ளானென்றெண்ணி அம்முனிவரைப் புடைத்துக்கொன்றனர்.

முனிவரைக் கொன்ற பிரமஹத்தி சப்த மாதர்களைத் துடர்ந்தது. அதனால் சப்தமாதர்களும் மனம் நொந்து இறைவனை வேண்டிப் பல புண்ணிய தலம் மூர்த்தி தீர்த்தங்களைத் தெரிசிக்கலாயினர் எங்கு சென்றும் பிரமஹத்தி நீங்கப்பெருமை கண்டு இத்திருக்கடம்பந் துறையை அடைந்தனர். இத்தலத்திற்கு வந்தவுடன் சப்த மாதர்களுக்கும் தங்கள் உடற்பாரம் குறைந்து மனம் ஒருவழிப்பட்டதை யுணர்ந்தனர். உடனே அப் புண்ணிய சிவதலத்தின் மகிமையை உணர்ந்து அகண்ட காவிரியில், பிரம தீர்த்தத்திலும் முக்காலமும் நீராடி இறைவனையும் உமாதேவியாரை யும் மற்றும் பரிவாரங்களையும் காவிரி நீர்கொண்டு அபிஷேகித்துப் பல நறுமலர் கொய்து காலந்தோறும் பூசித்து வந்தனை வழிபாடுகள் செய்து வந்தனர் அது முதல் சப்த மாதர்களும் சிவபெருமான் திருவருளால் பிரமஹத்தி நீங்கப்பெற்றுப் பேரின்ப வாழ்வெய்தினர் அந்நாள் முதல் சப்த மாதர்களும் கடம்பவனேசர் பக்கலில் உத்திர முகமாயிருந்து கொண்டு சதாகால மும் இறைவனை வழிபட்டு என்றும் விளங்கி வருகின் றனர்.

3. அகத்தியர் பூசித்ததும் தேவசர்மா வுக்கு திருமணக்கோலம் காட்டியதும்.

ஓர் காலத்தில கவத்திற் சிறந்த அகத்திய முனிவர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டுவந்தும் மனம் நிலையுறாது கண்டு இக்கடம்பவனத்தையடைந் தார். இங்கே பலகாலம் வசித்துக்கொண்டு பிரதிதின மும் வைகறையிற் காவிரியில் புனிதநீராடி, கடம்பவ னேசரையும், முற்றிலாமுலையம்மை, முருகப்பிரான், விநாயகர் முதலிய பரிவாரங்களையும் முறைப்படி

பூசித்து வணங்கிக்கொண்டு மாத்தியான்னிக காலத்தில் காவிரி நீர்கொண்டு வாட்போக்கியார் என்னும் அரதனநாதரையும் சுரும்பார் குழலம்மை முதலியவர்களையும் அபிஷேகித்துப் பூசித்துக்கொண்டு மாலையில் திருவீங்கொய்மலையில் எழுந்தருளிய மரகதாசலேசர், மரகதவல்லி முதலிய பரிவாரங்களையும் அபிஷேகித்துப் பூசித்து வணங்கி வந்தனர். இவ்வாறு சச்சிதானந்த சொரூபமான இவ்வுத்தம முத்தலத்தையும் அநேககாலம் வழிபட்டு ஆராதித்துவந்தார். அப்போது தேவசர்மா வென்னும் ஓர் இருடி அளவற்ற கொடிய பாவங்களைச் செய்தவனாய்த் துன்புற்று பல மூர்த்தி தல தீர்த்தங்களடைந்தும் தீராது, உத்தம தலத்திலே உத்தம பாத்திரமறிந்து கபிலைதானஞ் செய்தால் அப்பாபம் நீங்குமென்றறிந்தான். அதற்கு தக்க இடமும் பாத்திரமும் திருக்கடம்பந்துறையும் அத்தலத்தில் வீற்றிருந்தருளும் குருமுனியுமே தலமும் பாத்திரமுமென்றுணர்ந்து அகத்திய முனிவரிடத்தில் தன்னுள்ளக் கருத்தை விண்ணப்பித்துக்கொண்டான். அவ்வாறே அகத்தியமுனிவர் கபிலையையேற்றுக்கொண்டு அதன் புனிதமான பஞ்சகௌவியங்களால் கடம்பவனேசரையும், உமாதேவியார் முதலியோரையும் அபிஷேகித்து ஆராதிக்க உமாநாதன் பாலனைந்துடனாடும் பரமனாதலின் உமாதேவியாரோடும்இடபாரூடராய் அகத்தியமுனிவருக்கும்தேவசர்மா முதலிய முனிகணங்களுக்கு தெரிசனந்தந்து வேண்டிய வரங்களைக்கேட்பாயாகஎன்றனர். அத்தேவசர்மா இறையடி பணிந்து கண்ணீர் சோரப் பலவாறு துதித்து, "என்னை இக்கொடிய பாபத்தினின்று நீக்கிப்புனிதனாக்கிய பொற்குன்றே! பெருங் கருணைத் தடங்கடலாகிய பெம்மாற்குச்சிற்றறிவுடைய சிறியேன்

செயற்பாலது யாதுளது எல்லா முன்னுடைமையே, எல்லா முன்னுடைய செயலேயாதலின், அடியேனது குறையொன்றுளது. அதனைப் பூர்த்திசெய்ய அருள் புரிய வேண்டுமென்று தேவசன்மா பணிந்து கேட்டுக் கொண்டான். யாதெனப் பரமன் வினவ! கருணைக் கடலே! ஓர் காலத்தில் துவாதசாந்தஸ் தலமாகிய மதுரையில் தாங்கள் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடலில் ஸ்ரீ மீனாக்ஷி திருக்கலியாணத்தை நாங்கள் என்றும் மறக்கற்பாலதன்று. திருக்கைலாயத்தில் ஸ்ரீ பார்வதி தேவியார் திருக்கலியாணமும் நாங்கள் என்றும் மறக்கோம். அத்திருக் கலியாண கோலத்தை இத்தலத்திலே மற்றொரு முறை தெரிசிக்க விரும்புகின்றோம் என்றனர். அவர்கள் விரும்பிய வண்ணம் முற்றிலாமுலையம்மை மும்முலை நாயகியாக எழுந்தருளி மீனாக்ஷி சுந்தரேசர் திருக் கலியாணக் கோலக்காக்ஷி யளித்தனர். சகல முனிவர்களும் கண்டு களித்து ஆனந்த பரவசமானார்கள். அன்று முதல் இத்தலத்திற்கு வடமதுரையென்றும் அம்பாளுக்கும் சுவாமிக்கும் மீனாக்ஷி சுந்தரேசர் என்றும் பெயர் வழங்கி வருகின்றது தேவசர்மாவை வேதசர்மா என்றும் கூறுவர்

4. திருமால் பூசித்தது.

ஓர் காலத்தில் சோமகனென்னும் ஓர் அசுரன் தேவராதியோர்க்குப் பிராணனாயுள்ள நான்கு வேதங்களையுங் கவர்ந்து சுருட்டிக்கொண்டு தனது மாயா சத்தியால் பாதாள லோகத்திற் சென்று மறைந்து கொண்டான் தேவராதியார் வருந்தி திருப்பாற்கடலை யடைந்து ஸ்ரீமன் நாராயணனைப் பிரார்த்தித்தனர் விஷ்ணுமூர்த்தி திருக்கடம்பந்துறையை அடைந்து

இறைவனைப்பன்னாள் பூசித்து சிவபிரானருளால் மச்ச அவதாரமெடுத்துப்பாதலலோகஞ்சென்று சோமகனை கொன்று வேதங்களைக் கொணர்ந்து திருக்கடம்பந் துறையில் வீற்றிருந்தருளிய சிவபிரான் சந்நிதியில் சேர்ப்பித்துச்சகலதேவர் முனிவராதியோரரை சந்தோஷிக்கச் செய்தனர். அதுமுதல் விஷ்ணுமூர்த்தி இத்தலத்தின் அக்கினிமூலையிலுள்ள பிர்ம்மதீர்த்தக் கரையில் குருமூர்த்தியாயெழுந்தருளிச் சகல வேதங்களையும் தேவராதியோர்க்கு உபதேசித்துக்கொண்டு வீற்றிருந்தருளினர். அந்நாள் தொட்டு இக்காலத்திற்கு சப்தபுரி, வேதபுரியென்று வழங்கி வருகின்றது.

5. ஆறுமுகக் கடவுள் பூசித்தது.

பூர்வத்திலே உமாதேவியாருக்குச் சிவபிரான் உபதேசித்த பிரணவார்த்தத்தை முருகக்கடவுள் குருமுகமன்றி மறைந்து கேட்ட காரணத்தால், முருகப்பிரானை மூகராகும் வண்ணம் சிவபிரான் சபித்தருளினர். அச்சாபந்தீர முருகப்பிரான் பல சிவதலங்கடோறுஞ்சென்று உமாநாதனைப் பூசித்துந் தீராது திருக்கடம்பந்துறையை அடுத்துத் திருக்காவிரியில் நீராடி முற்றிலா முலையம்மையையும் திருக்கடம்பவனநாதரையும் அபிஷேகித்துப் பூசித்து வந்தித்து மூகம் நீங்கப்பெற்று. பல வேதங்களால் இறைவனைத் துதித்து வழிபடுவாராயினர். உமாதேவியார் குமரக் கடவுளை எடுத்து அணைத்து உச்சிமோந்து உமாநாதர்க்கு மருங்கே அமரச் செய்தனர். அதுமுதல் இத்தலத்திற்கு கந்தபுரம்யென்று வழங்கலாயிற்று. அங்குளஎழுந்தருளியிருக்கும் சோமாஸ்கந்தமூர்த்தியை அன்போடு தெரிசிப்பவர்கள் ஜென்மமெடுத்த

பயனுகிய ஞானமும், முத்தியும் எளிதிற் பெறுவர் கார்த்திகை, மார்கழி மாதங்களில் அச்சந்நிதியில் தீப மேற்றிவைப்பவர்கள் திருக்கைலாய மலையை நீங்கா தடைந்து வாழ்வர். சித்திரை மாதம் திருவோணம், ஆனி மாதம் உத்திரம், மார்கழி மாதம் திருவாதிரை. ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில சதுர்த்தசி இவ்வாறு தினங்களில் இத்தலத்திலுள்ள நடராஜப் பெருமானுக்கு ஆவின் பால முதலிய பஞ்சகௌவி யங்களால் அபிஷேகித்தவர்களும் க்ஷீரான்ன நிவே தனம் செய்தவர்களும், குபேரச்செல்வமடைவர். சித்திரை, வைகாசி மாதங்களில் வரும் பூரணையிலும், சூரிய, சந்திரகிரஹண காலங்களிலும், விஷுபுண் ணிய காலங்களிலும், பஞ்சப்பருவங்களிலும் அகண்ட காவிரியிலும், பிர்ம்ம தீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்து, உமாநாதனை வழிபடுவோர்கள் அடையும் பலன் அளவிட முடியாது.

1. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திரு க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

திரையார் புனற் கெடில வீரட்டமுந் திருவாரூர்
தேவூர், திரு நெல்லிக்கா,
உரையார் தொழநின்ற ஒற்றியூரும் ஒத்தூரும்
மாற்பேறும் மாந்துறையும்
வரையா ரருவி சூழ்மா நதியும் மாகாளங்
கேதாரம் மா மேருவும்
கரையார் புனலொழுகு காவிரி சூழ்
கடம்பந் துறை யுறைவார் காப்புக்களே.
இடைமரு தீங்கோ யிராமேச் சுரம்
இன்னம்பர் ஏரிடைவை ஏமப் பேரூர்
சடைமுடி சாலைக்குடி தக்களூர்
தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம்புதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு
மயிலாடு துறை கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே
கயிலாய மலையெடுத்தான் கரங்களோடு
சிரங்களுரம் நெறியக்கால் விரலாற் செற்றோம்
பயில்வாய பராய்த்துறை தென் பாலைத்துறை
பண்டெழுவர் தவத்துறைவெண் துறை
[பயிற் பொழிற்
குயிலாலந் துறை சோற்றுத் துறைபூந் துறை
பெருந்துறையும் குரங்காடு துறையினோடு
மயிலாடு துறை கடம்பந்துறை யாவடு
துறை மற்றுந் துறையனைத்தும்
வணங்குவோமே.

2. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திரு நாட்டுத் தொகை.

தேங்கூ ருந்திருச் சிற்றம்ப லமுஞ் சிராப்பள்ளி
பாங்கூ ரெங்கள் பிரானுறை யுங்கடம் பந்துறை
பூங்கூ ரும்பர மன் பரஞ்சோதி பயிலுமூர்
நாங்கூர் நாட்டு நளங் கூர்நறை யூர்நாட்டு
நறையூரே.

3. பட்டிணத்தார் பாடல்.

க்ஷேத்திர வெண்பா.

திருச்சிற்றம்பலம்

தண்ணிப் பரவுந் திருவா
வடுதுறை நல்ல நல்லூர்
மண்ணிற் பொலி கடம்பூர்
கடம்பந்துறை மன்னு புன் கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை
யேர்கொ ளெதிர் கொள்பாடிக்
கண்ணிப் பிறைச் சடையோன் கச்சி
யேகம்பங் காண்மீன் சென்றே.

4. துதிப்பாடல்.

திருவாரூர் ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர் பாடிய கீர்த்தனை.

ராகம் :- கேதார கௌளை. தாளம்:- ரூபகம்

பல்லவி

நீல கண்டம் பஜேகஹம் ஸததம்
நீர ஜாஸந திநுதம் (நீல)

அனுபல்லவி

பாலகுசம் பாஸகிதம் பாலசந்திர ஸேவிதம்
சீலகுரு குஹபூஜிதம் ஸ்ரீ கதம்பவந நாதம்

சரணம்

அக்ஷய ரூபா கண்ட காவேரி தீரோத்ரா
பிமுக பஞ்சமுகம் ரக்ஷித பக்தப் ரமுகம்
நக்ஷரத்ரேச சேகரம் நாமரூப விசித்ர தரம்
தக்ஷதர மீஸ்வரம் கேதார கௌரீ ப்ரியம்
தக்ஷிண காசீபுரம் தண்டி காமத்ரிபுரம்
தக்ஷாத்வர ஹரம் ஹரம் தியாகரம் கமலகரம்.

இலக்கியப் பாடல்கள்.

உ

சிவமயம்

5. திருக்கடம்பந்துறைத் தேவாரம்

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தது

திருச்சிற்றம்பலம்

முற்றிலாமுலையாளிவளாகிலு
மற்றந்தீர்க்கும் மறிவிலளாகிலும்
கற்றைச் செஞ்சடையான் கடம்பந்துறைப்
பெற்றமூர்தியென்றாளெங்கள் பேதையே. (1)

தனகிருந்ததோர்தன்மையராகிலு
முனகுதீரத்தொழுதெழுமின்களோ
கனகப்புன்சடையான் கடம்பந்துறை
நினையவல்லவர்நீள்வீசும்பாள்வரே. (2)

ஆரியந்தமிழோடிசையானவன்
கூரியகுணத்தார்குறிநின்றவன்
காரிகையுடையான் கடம்பந்துறைச்
சீரியபத்தர்சென்றடைமின்களே. (3)

பண்ணினின் மொழிகேட்கும் பரமனை
வண்ண நன் மலரான்பலதேவருங்
கண்ணனும் மறியான் கடம்பந்துறை
நண்ண நம்வினையாயின நாசமே. (4)

மறைகொண்டமனத்தானைமனத்துளே
நிறைகொண்ட நெஞ்சினுள் ளூறவைம்மினோ
கறைகொண்டானுறையுங்கடம்பந்துறை
சிறைகொண்டவினை தீரத் தொழுமினே. (5)

நங்கைபாகம்வைத்தநறுஞ்சோதியைப்
பங்கமின்றிப்பணிந்தெழுமின்களோ
கங்கைச் செஞ்சடையான் கடம்பந்துறை
யங்கமோதியரனுறைகின்றதே. (6)

அரியநான்மறையாறங்கமாயைந்து
புரியன்றேவர்களேத்தநஞ்சுண்டவன்
கரியகண்டத்தினன் கடம்பந்துறை
யுரியவாறுநினைமடநெஞ்சமே. (7)

பூமென்கோதையுமையொருபாகனை
யோமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தாற்
காமற்காய்ந்தபிரான் கடம்பந்துறை
நாமமேத்ததந்தீவினை நாசமே. (8)

பாரணங்கி வணங்கிப்பணிசெய
நாரணன் பிரமன்ன றியாததோர்
காரணன் கடம்பந்துறைமேவிய
வாரணங்கொருபாலுடைமைந்தனே. (9)

நூலானன்ருநினைமின்கணேய்கெடப்
பாலானைந்துடனுடும்பரமனுர்
காலாலூனறுகந்தான் கடம்பந்துறை
மேலானுஞ் செய்தவல் வினைவீடுமே (10)

திருச்சிற்றம்பலம்

சுவாமிதிருநாமம் கடம்பவனநாதர்
தேவிதிருநாமம் முற்றிலாமுலையம்மை

அருணகிரிநாதசுவாமிகள்

6. திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ்

புணரியும னங்கனம் புஞ்சுரும் புங்கருங்
கயலினெடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புதுநிலவ ருந்தியுந் துஞ்சுநஞ் சும்பொருப் பெறி
[வேலும்

பொருவென்வி கன்றகன் றங்குமிங் குஞ்சுழன்
றிடைகடைசி வந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்
புலியிளைஞர் முன்பயின் றம்பொனின் கம்பிதக்
[குழைமோதி

குணலையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரித்தரிஞ் சங்கடஞ் சந்ததங்
கொடுமைசெய்து சங்கொடுஞ் சிங்கிதங்
[குங்கடைக் கணிஞர் பால்

குலவுபல செந்தனந் தந்துதந் தின்புறுந்
த்ரிவிதகர ணங்களுங் கந்ததின் செம்பதங்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற்
[றமைவேனே

துணர்விரிக டம்பமென் தொங்கலுப் பம்புறுப்
புழுகுமச லம்பசஞ் சந்தனஞ் குங்குமந்
தொகுகளப முந்துதைந் தென்றுதன் கொன்று
[பத்திருதோளுந்

தொலைவில்சண்மு கங்களுந் தந்த்ரமந் த்ரங்களும்
பழனிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந்
துதிசெயுமே யன்பர்தஞ் சிந்தைசென் றன்புறப்
[பதிவாழ்வாய்

கணபண புயங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக்
[குருநாதா

கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குருமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப்
[பெருமாளே

7. ஐயடிகள் காடவர் கோனயனர் அருளிச்செய்த க்ஷேத்திரத் திருவெண்பா

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட்டாவி
யொழுகும் பொழுதறிய வொண்ணு-கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பார்
குழித்தண் டலையானைக் கூறு.

8. சிவநாமப்பல்தொடை வெண்பா

தோன்றுங் கடம்பந் துறைமுற்றிலா முலையை
ஏன்ற கடம்பவனேசனே.

9. கடம்பவன மான்மியம்

(யாழ்ப்பாணம்-வண்ணை தாமோதரம்பிள்ளை அவர்கள் இயற்றியது)

விநாயகர்

1. சீர்மலியாரணச்சிரத்துவாழ் தரும்
ஓர் பிரணவப் பொருள் உலகந் தேறிடக்
கார்நிற வாரணக் கடவுளா மிறை
ஏர்மலி பதாம்புயம் இதயத் தோங்குமே.

கடம்பவனநாதர்

2. இடம்பரவி உமையம்மை திருஞாலம்புரந்தருள
மடம்பரவும் உயிர்களெல்லாம் மால்தீர்ந்துவீ
[டெய்த
நடம்பயிலும் ஒருதனிமெய்ஞ் ஞானவெளி
[அருளுருவாய்க்
கடம்பவனத்துறையமர்ந்த கண்ணுதலின் கழல்
[போற்றி

3. வேதபுரீச போற்றிவியன் சத்தபுரத்தாய் போற்றி
மாதுமை நாதபோற்றி மாண்பிரமேச போற்றி
தீதுசேர் வினை இரண்டுந் தீர்த்தருள் இறைவ
போற்றி
ஓதுநற்கடம்ப வாரண்யம் உறையொருவ போற்றி
4 சீர்மிகு வாழ்வினோடு செல்வநற்சுகங்களீந்தே
ஆருடல்புனிதமேவ ஆண்டருள் அமலசெம்மை
சேர்திருவடிகள் நீங்காச்சிந்தை தந்தருள்வாய்
போற்றி
கார்மலிகாள கண்டக்கடவுளே போற்றி போற்றி

முற்றிலா முலையம்மை

5. சிற்றிடையும் இருகரமும் சேவடியும் மலர்முகமும்
பற்றிடுவோர் வினையொழிக்கும் பரங்கருணைத்
[திருநோக்கும்
உற்றடியார் பணிகடம்பவனமேவும் ஒருதேவி
முற்றிலா முலையம்மை முளரிமலர் அடிபோற்றி.
(கடம்பவன மான்மியம்)

பொதுப்பாடல்கள்.

முருகப்பெருமான்

6. மூவிருமுகங்கள் போற்றிமுகம் பொழிகருணை
[போற்றி
ஏவரும்துதிக்கநின்ற ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடிவைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னுன்
சேவலும் மயிலும்போற்றி திருக்கைவேல்
[போற்றி போற்றி
(கந்தபுராணம்)

நடராஜர் (ஆடல் வல்லார்)

7. உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தா டுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.
(பெரிய புராணம்)

தக்ஷிணமூர்த்தி (தென்முகக் கடவுள்)

8. மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்காட்சியின் கதுவநல்கிய
செம்மலே அலதுளம் சிந்தியாதரோ
(திருவானைக்கா புராணம்)

நால்வர்

திருஞானசம்பந்தர்

9 பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன்
கழல் போற்றி

திருநாவுக்கரசர் (அப்பர்)

ஆழிமிசைக்கல்மிதப்பில் அணைந்தபிரான்
அடிபோற்றி

சுந்தரமூர்த்தி

வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி

மாணிக்கவாசகர்

ஊழிமலி திருவாத வூர்திருத்தாள் போற்றி
(பெரிய புராணம்)

சண்டிகேஸ்வரர்

10. ஆவின் பாலரனுக்காட்ட அந்தணற்காய்ந்தே
என்றும்
சேவின்மேல் வருவார் தம்மை தேவியோடழைத்துச்
செங்கேழ்
மாவினங்கிடந்துபாடும் மாலிகைவாங்கிக்கொண்ட
தேவினஞ்சூழும் நள்ளார்ச்சேய்ஞ்ஞலூர்ச்
சேயைத் தாழ்வாம்.
(திருநள்ளாற்றுப் புராணம்)

கோளறுபதிகம் (நவக்கிரகங்கள்)

11. வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கைமுடி மேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே
(திருஞான சம்பந்தர்)

10. கடம்பர் கோயில் உலா.

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. Dr. உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்தது. உலாவென்பது தமிழ்ப்பிரபந்தங்களில் ஒன்று, (உலா-பவனி) தலைவன் பவனி வரும்போது வீதியில் உள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈறுனஏழுவகைப் பருவப்பெண்களும் தலைவனைக்கண்டு காதல் கொள்வதாகப் பாடப்படும் நூல்.

சித்தி விநாயகர்

பொன்மருவு தென்கடம்பைப் பூரணவிலாசவுலா
நன்மதுரமாக நவிற்றவே-என்மனத்து
வஞ்சத்திருப்பதஞ்செய் மைந்துறு சித்திக்களிற்றின்
கஞ்சத்திருப்பதமே காப்பு.

உலா-நூல்

சீர்கொண்ட சத்திசிவமா யருள்புரியும்
பார்கொண்ட சோதிப் பசுபதியாய்-ஏர்கொண்ட
அண்டமா யண்டத்தினப்பாலா யிப்பாலாய்ப்
பிண்டமாய்ப் பல்லுயிரின் பேதமாய்ப்-பண்டை
அருவாயுருவா யருவுருவ மொன்ருய்
மருவாய் மலரின் வடிவாய்ப்-பெருவாழ்வாய்
எல்லாவுயிர்களுக்கும் இன்பம் புணர்த்தி வைக்கும்
வல்லான் கருணை மகாதேவன் —
கந்தவேள் முந்தக்கடிமலரால் அர்ச்சித்துப்
புந்திமகிழ் கந்தபுர நாதன் —
தன்னையருச்சிக்கத் தான்மகிழ்ந்து நின்றிடுமேழ்
அன்னையர் பாவமகற்றினேன்
எந்தை மணஞ்செய் தியன்றதிருக் கல்யாண
சுந்தரனுந் தன்மையிங்குத் தோற்றிடென்-அந்தப்
படியே தரிசனமும் பாலித்தாட் கொண்டோன்
அடியார்க்கெளியவனுனன்
சுகத்தியன் மாமுனிவோர் சூழ்ந்துபரவும்
அகத்தியன் பூசனைசெய் ஐயன்
தேனேகனியே செழும்பாகே தெள்ளமுதே
ஊனே உடலின் உயிர்க்குயிரே-கோனேயெம்
உள்ளமே உள்ளத்தின் உள்ளுணர்வே பேரின்ப

வெள்ளமே வெள்ளைவிடைப்பாகா-தெள்ளுதமிழ்ச்
சொல்லே பொருளே துதிசேர் இருநிதியே
எல்லே அஞ்ஞான இருளகற்றும்-வல்லானே
என்றென்று பன்முறை நின்றேத்த அருளுமதி
ஒன்றென்று செஞ்சடையான் ஓர்காலும்-குன்றாத
சீருடையான் செல்வச் சிறப்புடையான் தென்கடம்
ஊருடையான் போந்தான் உலா [பை

---

11. செந்தமிழ்ப் பெருமை

(கடம்பர்கோயில் குருசாமி முதலியார் அவர்கள் தொகுத்தது)

செஞ்சடைக் கடவுளுந் தேவராதியரும்
செந்தமிழ் விளக்கிடச் சேணிமிந் தருளினர்
உச்சிதத் தீந்தமிழு ருசியாற் சிவபிரான்
பிச்சையும் பிரம்படி பேற்றுப் பிறங்கினன்
தமிழ்மறை யொன்றையே தரணியிற் சிவபிரான்
அமிழ்தெனத் தன் கரத் தழகுற எழுதினன்
நால்வர் சொல்மொழியு மந்நால்வர் செல்வழியுமே
மேலுல குய்த்துயிர் வீடுறல் சத்தியம்.

---

12. ஸ்ரீ திருப்பதி சுவாமிகள் அருளிய நூல்கள்

திருச்சி ஜில்லா கரூரைச் சார்ந்த அரவக்குறிச்சி என்னும் திருப்பதியில் ஸ்ரீசுவாமிகள் தோன்றித்துற வறம் பூண்டு வாழும்போது தமது ஞானசிரியருடைய

அருள் நோக்கம் பெற்று, உலகம் உய்யும் வண்ணம் ஞானலோகம். வித்தியா கீதை, பத்திநெறி முதலிய ஞான நூல்களை இயற்றிக் கடம்பர்கோயிற் பகுதியில் வாய்க்காலுக்கு வடகரையில் நிர்விகற்ப சமாதி அடைந்தனர்.

உயிர்க்கலங்க லீர் தன்னில் ஓர்விருத்தி ஞான
அயிர்க்க தகத் தூளிட்ட விதைதச் —செயிர்ச்சேறு
போக்கின தனுடனே போமக் ககத்தூள்
நீக்கமறு சிவந்தெண்ணீர். (ஞானலோகம்)

மேலும் இத்தலத்துக் காளத்தி என்பவரால் இயற்றப் பெற்ற அந்தாதி ஒன்றும், திருவாரூர் முத்துசாமி தீக்ஷிதரால் இயற்றப்பெற்ற "நீலகண்டம் பஜே" என்னும் வடமொழிக் கீர்த்தனமும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. "நூலால் நன்று நினைமின்கள்" என்னும் தேவாரத் திருவாக்கின்படி இத்தலத்துக்குரிய பாடல்களை பயின்று பெருமான் அருளைப் பெறுவார்களாக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

ஸ்ரீகடம்பவன நாதர் கழல்போற்றி.

அச்சிட்டோர் :- பழநியப்பா பவர் பிரஸ், குளித்தலை.